DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous CASE No: C.C. No.21/14
Preliminary Register

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 3 |
| Name | : | Masanam |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.19

முதல் விசாரணை:

நான் நல்லுத்தேவன்பட்டியில்˙ குடியிருந்து வருகிறேன். எஸ்ஓஆர் பெட்ரோல் பல்க்கில் மேனேஜராக வேலை பார்க்கிறேன். சாட்சிகள் மலையரசன், பிரபாகரன் மற்றும் வாகன விபத்தில் இறந்த செல்வக்குமார் ஆகியோரையும் தெரியும். 2013ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒருநாள் என் சித்தப்பா ராமையா விசேசம் வைத்திருந்தார். அதற்காக இலை வாங்குவதற்காக பிரபாகரனும் செல்வக்குமாரும் உசிலம்பட்டிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தனர். நானும் மலையரசனும் உசிலம்பட்டியில் அப்பொழுது இருந்தோம். நாங்கள் நால்வரும் டிஇஎல்சி பள்ளி அருகே டீ சாப்பிட்டு விட்டு மதியம் ஒன்னரை மணி அளவில் எங்களுக்கு முன்பு செல்வக்குமாரும் பிரபாகரனும் ஒரு வாகனத்தில் சென்றனர். நானும் மலையரசனும் பின்னால் ஒரு வாகனத்தில் சென்றோம். முன்னால் சென்ற வாகனத்தை செல்வக்குமார்தான் ஓட்டி சென்றிருப்பார் என்று நினைக்கிறேன். நாங்கள் இருவரும் 50 மீட்டர் இடைவெளியில் பின்னால் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது பண்ணைப்பட்டி விலக்கருகே எதிர்த்தாற்போல் வந்து ஒரு ஈச்சர் வேன் செல்வக்குமார் மற்றும் பிரபாகரன்

சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. அதில் பிரபாகரனுக்கு கால் ஒடிந்து விட்டது. அவருக்கு வேறு என்ன காயங்கள் இருந்தன என்று எனக்கு ஞாபகமில்லை. செல்வக்குமாருக்கு முகம், கன்னம், நெற்றியில் காயம் ஏற்பட்டிருந்தது. அதன்பிறகு 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அங்கிருந்து 2 பேரையும் மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது செல்வக்குமார் போகும் வழியிலேயே இறந்து விட்டார். பிரபாகரனை மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். ஈச்சர் வேனை ஓட்டி வந்த டிரைவரை நான் பார்க்கவில்லை. வாகனம் கேஎல் என பதிவு எண் எழுதப்பட்டிருந்தது. தற்போது பதிவு எண் முழுவதும் ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

சம்பவம் நடந்த கிழமை ஞாபகமில்லை. நான் வேலைக்கு வந்தேனா இல்லையா என்று நிர்வாகத்தினருக்குத் தெரியும். நான் அப்பொழுது மேலாளராக இல்லை. அன்றைய தினம் நான் பணிக்கு செல்லவில்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. எங்களது பல்க்குக்கு தெற்கே தான் சம்பவம் நடந்தது. அந்த சமயத்தில் எங்கள் பல்க்கில் 3 பேர் வேலை பார்த்தார்கள். அன்றைய தினம் சங்கர், பால்பாண்டி, மோகன் ஆகியோர்கள் பல்க்கில் வேலை பார்த்தார்கள். அவர்களுக்கு அன்றைய தினம் நான் வேலைக்கு வரவில்லை என்று தெரியும். நானும் மலையரசனும் ஊரில் இருந்து 12.00 மணிக்கு புறப்பட்டு உசிலம்பட்டி டிஇஎல்சி பள்ளிக்கு அருகில் உள்ள டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது 1.00 மணி இருக்கும். அப்பொழுதுதான் காயம்பட்டவரும் இறந்தவரும் மற்றொரு வாகனத்தில் வடக்கிருந்து தெற்காக வந்தார்கள். விபத்து நடந்த இடத்தில் அசுவமாநதி பாலம் உள்ளது. அதற்கு தெற்கே மேற்குநோக்கி பண்ணைப்பட்டி செல்லும் சாலை உள்ளது. அதற்கும் தெற்கே நல்லுத்தேவன்பட்டி கண்மாய் உள்ளது. அவர்களும் எங்களுடன் டீ சாப்பிட்டார்கள். அவர்களுக்கு பின்னால் 2, 3 நிமிடத்தில் 50 மீட்டர் இடைவெளியில் சென்றோம். விபத்து நடந்தது தேசிய நெடுஞ்சாலை இல்லை. சாதாரண சாலை தான். மலையரசன் என்னை விட உயரமானவர். இறந்தவர் மலையரசனுக்கு உடன்பிறந்த சகோதரர். நாங்கள் போய் பார்க்கும்போது 3 பேர் கூடியிருந்தனர். இருசக்கர வாகனம் சாலையின் கிழக்குப்புறம் கிடந்தது. செல்வக்குமார் சாலையின் நடுரோட்டில் கிடந்தார். விபத்தை ஏற்படுத்திய வேன் அங்கு நின்றிருந்தது. ஓட்டுனரை நான் சரியாக பார்க்கவில்லை. மற்ற நபர்கள் கேள்விப்பட்டுத்தான் வந்தார்கள்.இறந்தவருக்கு

இழப்பீடு பெற்றுள்ளார்கள். நான் சொல்வதுபோல் சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளில் அசா1ன்னோடு இருசக்கர வாகனத்தில் போகவில்லை என்றும் இறந்தவர் எனக்கு சித்தப்பா மகன் என்பதால் அசா1 கேட்டுக் கொண்டதற்கிணங்க சம்பவத்தின்போது அவருடன் பயணம் செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.விஇல்லை

/Sd./ Masanam

Taken down by me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd./ M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.